


# கம்பனில் இயற்கை

**KAMBANIL IYARKAI (NATURE IN KAMBAN)**

*(Research papers presented at the World Tamil Kambaramayana research Conference.)*

First Edition - March 2016

**Editors:**
'Kamban Adisoodi' **Pazha. Pazhaniappan**
Dr. **C. Sethupathi**
Dr. **M. Palaniappan**
Dr. **R.Kurinjivendan**
Prof. **C.Arunan**

**Pages:** 480

**Rate:** 500/-

**Published By:**

**KAPILAN PATHIPPAGAM**
321. 3rd Main Road,
Mahavir Nagar, Karuvadikkuppam,
Puducherry - 605 008.

**Printed at:**

**SURYA PRINT & SOLUTIONS**
Sivakasi.

ISBN: 978-93-84428-16-7

10.04.2016 அன்று காரைக்குடி கம்பன் கழகமும் அந்தமான் தமிழ் இலக்கிய மன்றமும் அந்தமான்- போர்ட் பிளேயரில் இணைந்து நடத்திய கம்பராமாயண மூன்றாவது உலகத்தமிழ் ஆய்வுக் கருத்தரங்க விழாவில் இந்நூல் வெளியிடப் பெற்றது.

**கம்பனின் இயற்கைப் புனைவில் மலர்கள்**
திருமிகு. ஆ.சகுந்தலா 349

**கம்பராமாயணத்தில் தென்னை**
முனைவர் க. கதிரவன் 353

**வனம்புகு படலம் மற்றும் இந்திரகூடப் படலத்தில் விலங்குகள்**
திருமிகு. கமலா தோத்தாத்திரி 357

**கம்பனில் விலங்குகள்**
திருமிகு. க. காளீஸ்வரி 365

**உழவரின்நிலை அன்றும் இன்றும்**
திருமிகு. சு. அர. கீதா 370

**கம்பராமாயணத்தில் சுற்றுச்சூழல் மாசுபாடு**
முனைவர் வேல். கார்த்திகேயன் 375

**கம்பனின் சுற்றுச்சூழல்**
திருமிகு. தே. நா.கோலம்மாள் 380

**கம்பராமாயணத்தில் சூழல் பாதுகாப்புச் சிந்தனைகள்**
முனைவர் இரா. சுதமதி 384

**கம்பர் போற்றிய சுற்றுச்சூழல்**
புலவர் தமிழ்த்திருமால் 390

**கம்பர் காட்டும் இராவணன் சடாயு போர்**
திருமிகு. வ. மீனாட்சி 395

**கம்பனில் பல்லுயிர் வளமேம்பாட்டுச் சிந்தனைகள்**
முனைவர் க.முருகேசன் 400

**கம்பனில் இயற்கையோடியைந்த வாழ்வு**
திரு. ந.செயராமன் 406

# கம்பனில் பல்லுயிர் வளமேம்பாட்டுச் சிந்தனைகள்

முனைவர் க. முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

நிலவளம், நீர்வளம், கனிமவளம் முதலான வளங்களிலும் சிறந்ததெனக் கருதப்படுவது மனிதவளமே. மனித வளத்தை மேம்படுத்திக்கொண்ட நாடு இலட்சியத்தை நோக்கிய பயணத்தைத் தடையின்றித் தொடர்கிறது எனலாம்.

அயோத்தியைத் தலைநகராகக்கொண்ட கோசல நாட்டில் மனிதவளம் வலிமை பெற்றிருத்தலையும், வாலியைத் தலைவனாகக் கொண்டியங்கிய கிட்கிந்தை நாட்டில் குரங்கு இனம் வலிமை பெற்றிருந்ததையும், இராவணனின் ஒப்பில்லாத திருநாடாகிய இலங்கையில் அரக்கர்இனம் மிகப்பெரிய ஆற்றலாகத் திகழ்ந்ததையும் கம்பர் வியந்து பாடுகின்றார்.

"மனிதவளம் என்பதற்கான விளக்கத்தையும், பொது நிருவாகம் என்பதற்கான பொருளையும் ஒருமிக்கச் சேர்த்தால் மிகச்சிறந்த தேசத்திற்கான மனித வளமேம்பாடு உருவாகிறது" என்கிறார் இரா.பாஸ்கர சேதுபதி (பொது நிருவாகவியல், ப.)

கோசலநாட்டு மக்கள் பொறிகளின்வழிச் செல்லாத நுண்ணறிவு வாய்க்கப்பெற்றவர்களாகவும், பிறர்தீமை என்பதை அறவே நினைத்திராத மனம் உடையவர்களாகவும் விளங்கும் தன்மையைக் கம்பர் நாட்டுப்படலத்தில் பாடுகின்றார். பிறை நுதல் போன்ற நெற்றியை உடைய பெருந்தடங்கண் மகளிருக்கும் கல்வியும் செல்வமும் பூத்திருந்தது, ஆயகலைகளைக் கற்றுத் தருகின்ற கலைதெரி கழகங்களில் இளமையும் அழகும் நிறைந்த இளைஞர்கள் கூடியிருந்தனர்.

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை, பல கேள்வி மேவலால் (கம்ப., பால., பா.)

என்ற பாடலில் சமத்துவத்தின் மேன்மையைக் காட்டுகின்றார்.